2014 டிசம்பர் 5]

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

ஸ்கேன் வசதி

***3476**—**திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

தமிழ்நாட்டில் உள்ள 1,751 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,290 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஸ்கேன் பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. அதுபோக மீதமுள்ள 328 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டு, ஸ்கேன் பிரிவுகளை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆண்டு புதிதாகத் துவங்கப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஸ்கேன் பிரிவுகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டு அரசாட்சி, முத்தான நல்லாட்சி, மக்கள் முதல்வரின் ஆலோசனையின்படி நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.*

முல்லைப்பெரியாறு பிரச்சினை, காவேரி பிரச்சினை, தமிழக மீனவர்கள் பிரச்சினை என எல்லாத் துறைகளிலும் துரித நடவடிக்கை எடுத்துவரும், தமிழக மக்களின் ஏகோபித்த பாராட்டுகளையும், அபிமானத்தையும் பெற்று நல்லாட்சி நடத்துகின்ற தமிழக அரசைப் பாராட்டுகின்றேன்.

அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஸ்கேன் வசதி ஏற்படுத்தி தர அரசு ஆவன செய்ய வேண்டும். செவிலியர்கள், மருந்தாளுநர்கள் போன்ற பணியாட்கள் பற்றாக்குறை உள்ளது. துரிதமாக அந்தப் பணியாட்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் deputation முறையில் இரண்டு, மூன்று இடங்களில் மருத்துவர்களாகப் பணிபுரிகின்றார்கள். எனவே, போதிய மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை காவலர் மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. இவற்றில் எக்ஸ்-ரே, இ.சி.ஜி. வசதிகளை உடனடியாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

மதுரை மத்திய தொகுதியிலுள்ள சுந்தரராஜபுரம், ஞாயிற்றுக்கிழமை சந்தை பகுதிகளிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்து இருப்பதால், அதனை ஆய்வு செய்து, புதிதாக நவீன வசதிகளுடன்கூடிய கட்டடங்களைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றும், எப்போதும், என்றென்றும் தமிழக அரசின் ஆட்சியில் மக்கள் மிகுந்த பயன்களையும், மன நிறைவையும் பெற்று வாழும் நிலை உள்ளதால், தமிழக அரசையும் மக்களின் முதல்வர் வழிகாட்டும் ஆலோசனையின்படி நல்லாட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் அவர்களையும் பாராட்டி, எனது வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.